**சுருக்கம்**

குத்தகை – மயிலாடுதுறை நகராட்சிக்குச் சொந்தமான இராஜன் தோட்டம் விளையாட்டு மைதானத்தை ஓராண்டுக்கு ரூ.10,000/- வீதம் 30 ஆண்டு காலத்திற்கு குத்தகை அடிப்படையில்இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு அளித்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை.

அரசாணை(நிலை)எண்.133 நாள்: 25.9.2007.

படிக்கப்பட்டது:

1. நகராட்சி நிர்வாக ஆணையர் செயல் முறை ஆணை ஆர்.ஒ.சி. எண்.33256/2006/TP3 நாள். 29.6.2006.

படிக்க:

2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண். 33256/06/TP3, நாள். 9.10.2006.

3. இந்திய விளையாட்டு ஆணைய இயக்குநரின் கடித எண். SAI/B/SCH/MyL/87/06-07, dated.5.10.2006 மற்றும் 9.2.2007.

ஆணை:

மயிலாடுதுறை நகராட்சிக்குச் சொந்தமான இராஜன் தோட்டம் விளையாட்டு மைதானத்தை, அரசு நிர்ணயிக்கும் விலைக்கு, 30 ஆண்டு கால குத்தகை அடிப்படையில், அரசு அனுமதி பெற்று, மயிலாடுதுறை நகரின் அனைத்து பொது மக்கள் / பள்ளி / கல்லூரி மாணவர்கள் மைதானத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்றும், நிர்வாக குழுவில் (Committee) துணைத் தலைவர் இடம் பெற வழிவகை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடனும், இந்த விளையாட்டு மைதானத்தில் செல்லும் அணுகு சாலைகளான மகாதானத்தெரு, செட்டித்தெரு, தருமபுரம் ரோடு, பெரிய தைக்கால் தெரு, பீர் தெரு ஆகிய சாலைகளுக்கு தார்ச்சாலை / சிமெண்ட் சாலை அமைக்கப்பட வேண்டும் என்றும், மற்றும் நகரின் முக்கிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன்இராஜன் தோட்டம் விளையாட்டு மைதானத்தை இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு வழங்க மயிலாடுதுறை நகர்மன்றம் தீர்மானம் இயற்றி அனுமதி அளித்துள்ளது.

2. நகராட்சி நிர்வாக ஆணையர், அரசாணை (நிலை) எண் 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.2.2000ல் தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரப்பகிர்வு மற்றும் மயிலாடுதுறை நகர்மன்றத் தீர்மானம் ஆகியவற்றின் அடிப்படையில், 29.6.2006 ஆம் நாளிட்ட செயல்முறை ஆணையில், மயிலாடுதுறை நகராட்சியின் இராஜன் தோட்டம் விளையாட்டு மைதானத்தை இந்திய

(த.பி.பா)

விளையாட்டு ஆணையத்திற்கு, விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக மயிலாடுதுறை நகராட்சிக்கு பாித குத்தகைத் தொகையாக ரூ. 47,780/-வழங்க வேண்டும் என்ற அடிப்படையில், 30 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விட ஆணை பிறப்பித்துள்ளார்.

3. இந்திய விளையாட்டு ஆணையம் ரூ. 47,780/-ஐ முதல் தவணை குத்தகைத் தொகையாக செலுத்திய பின்னர், தனது 9.2.2007 நாளிட்ட கடிதத்தில் மயிலாடுதுறையில் அமைக்கப்பட்டுள்ள இராஜீவ் காந்தி சிறப்பு விளையாட்டு மைதானம் 16 கோடி ரூபாய் செலவில் அமைத்திடவும் அதன் மூலம் ஏழை எளிய மாணவர்களும், பொதுமக்களும் பல்வேறு வகையான விளையாட்டுக்களில் (அதெலெடிக்ஸ், கூடைப்பந்து, கால்பந்து, மட்டைப்பந்து, கைப்பந்து மற்றும் பளு தூக்குதல்) அறிவியல் ரீதியான பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளதாகவும், தற்போது பயிற்சி பெற்றுவரும் 120 பயிற்சியாளர்களும், ஏனையவர்களும், தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றுநாட்டுக்கு புகழ் சேர்க்கும் வகையில், திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு, இத்திட்டத்திற்கான பொது வழிகாட்டுதல் நெறியின்படி, மதிப்பீட்டில் குத்தகை தொகை செலுத்துவதற்கான வழி வகை செய்யப்படவில்லை என்றும், கேரள மாநிலத்தில் தாளசேரி கிராமத்தில் உள்ள நிலத்தினை அம்மாநில அரசு இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு இலவசமாக வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

4. மயிலாடுதுறை மக்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைந்துள்ள சிறப்பு சரக விளையாட்டு மையத்தினால் விளையாட்டில் ஆர்வம் உள்ள ஒவ்வொரு மாணவருக்கும் பயிற்சி, உடை, விளையாட்டு உபகரணங்கள், உணவு மற்றும் தங்கும் வசதிக்காக சுமார் ரூபாய் 50 ஆயிரம் வரை அவ்வாணையம் செலவு செய்து வருவதாகவும், அப்பகுதி மாணவர்களுக்கு பயனளிக்கக் கூடிய இத்திட்டமானது சிறந்து விளங்க வேண்டுமென்பதால் நகராட்சிகள் நடைமுறை நூலில் தொகுதி 1-ல் (1.5.2007 அன்றுள்ளபடி) பத்தி 52, விதி 12 -ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளின்படி கூட்டுறவு சங்கங்கள், அரசு துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு நகராட்சி நிலங்களை ஏலமின்றி குத்தகை விடுவது குறித்து வழி வகை செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் தமிழ்நாடு மூன்றாவது நிதி ஆணையத்தின் வரிசை எண்.157, அத்தியாயம் எண்V, பத்தி எண்.44 (III) - இல் உழவர் சந்தைக்கான நிலங்களை வழங்குவதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளும் இந்த பொது நலச் செயல்பாடுகளில் தங்களது பங்கினை அளிக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளதன் அடிப்படையிலும், மயிலாடுதுறை நகராட்சியில் உள்ள இராஜன் தோட்டம் விளையாட்டு மைதானத்தை குத்தகைக்கு விடுவது பொதுமக்களின் நலன் கருதி, அரசால் எடுக்கப்படும் நடவடிக்கைத் தொடர்பான செயலாகக் கொண்டுள்ளதற்கு பொருந்தும் என அரசு கருதுகிறது.

5. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து, மயிலாடுதுறையில் அமைந்துள்ள இராஜன் தோட்டம் விளையாட்டு மைதானத்தை இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு ஏற்கனவே நகராட்சி நிர்வாக ஆணையரால் குத்தகை தொகை நிர்ணயம் செய்யப்பட்டு ஆணையிடப்பட்ட 29.6.2006 செயல்முறை ஆணையினை இரத்து செய்தும், அரசால் விதிக்கப்பட்டுள்ள குத்தகை தொடர்பான அனைத்து விதிகளையும் தளர்வு செய்து, மயிலாடுதுறை நகராட்சிக்குச் சொந்தமான இராஜன் தோட்டம் விளையாட்டு மைதானத்தை 30 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு ரூபாய் 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)

(p.t.o.)

வீதம் குறைந்த அளவில் குத்தகைத் தொகையாக நிர்ணயித்து, மயிலாடுதுறை நகராட்சியின் தீர்மான அம்சங்களில் கீழ்க்கண்ட சில மாற்றங்களுடன், இந்திய விளையாட்டு ஆணையம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில், இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு அரசு இதன் மூலம் ஆணையிடுகிறது.

(அ) மேற்படி மைதானத்தை மயிலாடுதுறை நகரின் அனைத்துப்பொதுமக்கள், பள்ளி / கல்லூரி மாணவர்கள் விளையாட்டு தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

(ஆ) நகரின் முக்கிய விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு இலவசமாக அனுமதி அளிக்க வேண்டும்.

(இ) நிர்வாகக் குழுவில் மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் அவர்களை சிறப்பு அழைப்பாளராக (Special Invitee) நியமிக்க வேண்டும்.

6. இவ்வாணை இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அ.சா.கு.எண்.3636,நாள் 3.9.2007 மற்றும் நிதித்துறையின் 6.9.2007 -ம் நாளிட்ட அ.சா.கு.எண்.2860/FS/P/07 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.தீனபந்து.
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -600 005.
இயக்குநர், இந்திய விளையாட்டு ஆணையம், நேதாஜி சுபாஷ் தென்னக மையம், மைசூர் சாலை, பெங்களூர் – 560 056.

நகல்:
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 116A, பெரியார் EVR நெடுஞ்சாலை, சென்னை-600 084.
நகராட்சி ஆணையர், மயிலாடுதுறை நகராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம்.
நிதித்துறை, சென்னை- 9.
இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரிக்கோப்பு.

//ஆணைப்படி// அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.